# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

**காவலன்**
**சந்தாதாரரின் கவனத்திற்கு**

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | ரூபா | | 9-00 |
| 6 மாத | ,, | ,, | 4-50 |
| 3 மாத | ,, | ,, | 2-25 |

(தபாற் செலவு உட்பட)

95-ம் புத். | 1970-ம் ஆண்டு ஆவணி மாதம் 8-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 29-ம் இல.


## கல்விக்குச் சமய அத்திவாரம் வேண்டும்

''கல்வியின் சித்தியை பரீட்சைகளினால் கணிக்க முடியாது. நல்லொழுக்கமே கல்வியின் பிரதான மானபயன். இக்காலத்தில் பெற்றோர்களும், ஆசிரியர்களும் இந்த அடிப்படை உண்மையை மனதில் ஆழப்பதித்து, இப்பயன் அளிப்பதற்கு கல்விக்குச் சமய அத்திவாரம் அவசியமென்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்'' என்று குருநாகல் திருக்குடும்ப கன்னியர் மடக்கல்லூரி அதிபர் சகோதரி ரூபேல் அவர்கள் அப்பள்ளிக்கூட வருடாந்த பரிசளிப்பு விழாவில் சமர்ப்பித்த அறிக்கையில் கூறினர். இப்பள்ளிக்கூடம் நிறுவப்பட்டு நூறு ஆண்டு நிறைவாகிற்று என்பதால் இவ் விழா மிகச் சிறப்பாக 1970-ம் ஆண்டு ஆடிமாதம் 17-ம் திகதி கொண்டாடப்பட்டது.

## ஆட்சிமன்ற சபாநாயகருக்கு கத்தோலிக்கரின் வரவேற்பு

தற்போதுள்ள பாராளுமன்றத்தின் சபாநாயகர் திரு. ஸ்ரான்லி திலகரத்தின என்பதையும், அவர் கோட்டைப்பிரிவுப் பிரதிநிதியென்பதையும் நேயர்கள் அறிவர். அவரது தொகுதியிலுள்ள கத்தோலிக்கமக்கள் சென்றவாரம் அவருக்கும் அவரது பாரியாருக்கும் ஒரு குதுகலமான வரவேற்பு அளித்திருந்தனர். அப்போது அவர் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் போக்கை விளக்கி, கத்தோலிக்கரை அதற்கு ஆதரவு அளித்து வருமாறு கேட்டுக்கொண்டார். அக்கூட்டத்தில் அவர் கூறிய பிரதானகருமங்கள் பின்வருமாறு:

- ஐக்கிய முன்னணி அரசாங்கம் நீதியாக நடந்து கிறீஸ்தவர்கள் விரும்பத்தக்க ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கும்.
- ''மெசெஞ்சர்'' போன்ற கத்தோலிக்க பத்திரிகைகளை தேசிய பத்திரிகைகளென மதித்து அவற்றை ஆதரித்துவரும்.
- இலங்கை வானொலி கூட்டுஸ்தாபன கத்தோலிக்க வழிபாட்டுச்சடங்குகள் கிரமமாகவும், சிறப்பாகவும் ஒலிபரப்புதல் செய்யப்பட ஒழுங்குகள் செய்யும்.

### மாணவர் ஒழுக்கத்தில் பள்ளிக்கூட விளையாட்டுக்களின் பங்கு

சென்றவாரம் கொழும்பு கொட்டாஞ்சேனை சென் பெனடிக்ஸ் கல்லூரி மாணவரின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின்போது அதற்குத் தலைமை வகித்த விளையாட்டு விவகார மந்திரி K. B. இரத்தினயக்கா அவர்கள் மாணவர்களின் ஒழுக்கத்தைச் சீர்ப்படுத்தப் பள்ளிக்கூட விளையாட்டுக்கள் எவ்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## இதுவே நியாயம்

ஆங்கில ஆட்சிமன்றத்தின் ஒரு பாகமாகிய பிரபுக்கள் சபையிலே கிருன்ற்செஸ்ரர் என்னும் ஆங்கிலபிரபு ஆங்கில கத்தோலிக்க திருச்சபையின் அதிபராகிய கருதினல் ஹீனன் அடிகளாரை ஆங்கிலபிரபுசபையில் ஓர் அங்கத்தினராக்க வேண்டும் என்று ஒருபிரேரணை கொண்டுவர இருக்கின்ருர். மெதடிஸ்ற் சபைத்தலைவர் சொப்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

### ருஷியாவில் புதிய பைபிள்களின் அமோக விற்பனை

ருஷியா தேசத்திலே அண்மையில் அத்தேச ஒதொடக்ஸ் கிறிஸ்தவ சபையினரினல் தயாரிக்கப்பட்ட "பைபிள்" நூல்கள் மிக விரைவாக விற்பனையாகி வருகின்றன என்று ஜேர்மானிய புதினஸ்தாபனங்கள் எடுத்துக் கூறுகின்றன. பப்ரிஸ்த்சபையினர் தயாரித்த "பைபிள்" நூல்களும் பல ஆயிரக்கணக்காக விற்பனையாகிவிட்டன.

## கொழும்பு வறியவர் மத்தியில் 100 வருட சேவை

கொழும்பு நகர வடபாகத்தில் பாலத்துறை என்ற பகுதியில் 1870-ம் ஆண்டு வண. பீற்றர் ஹறி என்னும் சுவாமியாரால் அப்பகுதியிலிருந்த சஞ்சுசையப்பர் கோவிலுக்கு அருகாமையில் ஒரு சிறு கொட்டிலாக அமைக்கப்பட்டது. சஞ்சுசையப்பர் பள்ளிக்கூடம். அங்கிலேயில் 30 வருடமளவில் இருந்த அப்பள்ளிக்கூடம் 1905-ம் ஆண்டு டிலாசால் சந்நியாசிகளுக்கு ஒப்படைக்கப்பட்டு அவர்களால் இன்றுவரையும் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இங்கு கல்வி பயின்ற மாணவர்கள் மிகவறியவர்களேயாயினும் சிலர் பிற்காலங்களில் அதிகாரமுள்ள வேலைகளில் அமர்ந்தவர்கள். இப்பள்ளிக்கூடம் கொட்டிலின்தோற்றத்தைவிட்டு இன்று பெற்றிருக்கும் அழகான தோற்றத்துக்கு பொறுப்பாளி ஒருவர் இருப்பாராயின் அவர் சங். சார்ள்ஸ் பிறதர் அவர்களே. இவ் வருடம் இப்பாடசாலை நிறுவப்பட்டு நூருண்டு முடிவு எய்துவது யாவருக்கும் மகிழ்ச்சிக்குரியதே.

### அவுஸ்திரியாவில் தேவஅழைத்தல் கூடுகின்றது

அவுஸ்திரியாவில் சென்ற வருட புள்ளி விபரங்களின் படி குருஅழைத்தல் பெற்றவர்களின் தொகை பத்துச் சதவீதம் கூடியிருக்கிறது. சென்றவருடம் 104 தியாக்கோன்மார் குருப்பட்டம் பெற்றிருக்கின்றனர். இவ்வாறு கிடைக்கும் புள்ளி விபரங்களிலிருந்து கிறிஸ்து சமயம் ஐரோப்பாவில் என்ன இடையூறுகள் மத்தியிலும் உயிருடன் இருப்பது மாத்திரமல்லாது வளர்ந்து கொண்டும் வருவது வெளிப்படை.

## வால்ஷ் அடிகளாரின் திகைப்பு

12வருடம் சிறையில் மறியலில் இருந்து அண்மையில் விடுதலை அடைந்த அமெரிக்க மேற்றிராணியார் வால்ஷ் அடிகளார் ஹொங்கோங் சென்றதும் அங்கே புதுமுறையில் திருப்பலி ஒப்புக்கொடுப்பதைக் கண்டு திகைப்படைந்தாரென அறிகிருேம். கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தல், இருவகையில் திருநன்மை விசுவாசிகள் பெறுதல் முதலியன அவருக்குத் திகைப்புக் கொடுத்த சிலவிஷயங்களாகும். சீன தேசத்திலே அந்நியநாட்டுக்கு உளவு வேலை பார்க்கும் குற்றம் சாட்டப்பட்டு வால்ஷ் அடிகளார் 12வருடம் சிறை இருந்ததை நேயர்கள் அறிவர். மறியலில்இருந்த காலத்தில் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டார் என சீனஅதிகாரிகள் கூறிவந்தனர் எனினும், தான் அவ்விதமாக ஒப்புக்கொள்ளவில்லை என வால்ஷ் அடிகள் சாதிக்கின்ருர்

## யாழ்ப்பாண மேற்றிராசனக் குருமாரின் பேரவை (செனெற்) கூடியது

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த குருமாரின் பேரவை (செனெற்) யின் முதற் கூட்டம் ஆடி 28-ம்திகதி யாழ்ப்பாண மேற்றிராசன இல்லத்தில் நடந்தேறியது. பேரவையின் விதிமுறைகளை ஆராய்ந்து அமைப்பதே கூட்டத்தின் பிரதான அம்சமாக இருந்தது. இதைத்தொடர்ந்து பேரவை அதிகாரிகள் பின்வருமாறு தெரிவு செய்யப்பட்டனர்:

**தலைவர்:**
மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை, O.M.I.
யாழ். மேற்றிராணியார்

**உப-தலைவர்:**
மகாவந். எல். ஆர். அன்ரனி ஆண்டகை
யாழ். துணை மேற்றிராணியார்

**செயலாளர்:**
வண. பிதா ஜே. பி. இம்மானுவெல் செல்வராஜா

**நிர்வாகக் குழு அங்கத்தினர்:**
வண. பிதா ரீ. ஏ. ஜே. மதுரநாயகம்
,, ,, ஜே. சி. செல்வரட்ணம், O. M. I.
,, ,, எஸ். ஜே. இம்மானுவெல்

பேரவை பின்வரும் ஆணைக் குழுக்களையும் நியமித்தது.

1. **திருவழிபாட்டு ஆணைக்குழு:**
   மகாவந். எல். ஆர். அன்ரனி ஆண்டகையின் தலைமையில்
2. **மறைக் கல்வி ஆணைக்குழு:**
   வண. ஜீ. ரீ. பாலசுந்தரம் சுவாமியார், O. M. I. தலைமையில்
3. **மேய்ப்புப்பணி, இல்லற அப்போஸ்தலத்துவம், இளைஞர், சமூகசேவைபற்றிய ஆணைக் குழு:**
   வண. ரீ. ஏ. ஜே. மதுரநாயகம் சுவாமியார் தலைமையில்
4. **திருச்சபை விருத்தி அப்போஸ்தலத்துவ ஆணைக் குழு:**
   வண. பிலிப் பொன்னையா சுவாமியார் தலைமையில்
5. **மேற்றிராசன விபரங்களடங்கிய புத்தகம் தயாரிப்பு:**
   வண. எச். லெக்குத்தூர் சுவாமியார், O. M. I. தலைமையில்
6. **குருக்கள் நலக்குழு:**
   மகாவந். எல். ஆர். அன்ரனி ஆண்டகையின் தலைமையில்.

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த 24 குருமார் பேரவையின் அங்கத்தினராயிருக்கின்றனர்.

**"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஷ்டரோகரின் அப்போஸ்தலர்

ஆறாவது என்றி அரசர்

இங்கிலாந்தின் 8-ம் என்றி அரசர் என்றால் எவருமே இலகுவில் அவரைப்பற்றி அறிந்துகொள்வர். ஆனால், அவருக்கு முந்திய என்றிஅரசர்கள் எழுவரையும்பற்றி எவருமே அறியமாட்டார்கள். இந்த எழுவரில் ஆறாவது என்றிஅரசர் ஒருபெரிய சுத்தவாளர். இங்கிலாந்திலே புரொட்டஸ்தாந்தசமயம் ஏற்படுவதற்குமுந்திய இருதலைமுறைகளிலும் அந்நாட்டிலே மிகப்பெரிய அற்புதங்கள் செய்தவரென இவர் வர்ணிக்கப்பட்டிருக்கின்றார். இவரைத் தொடர்ந்துவந்த ஏழாவது என்றியரசர் காலத்தில் அவரால் நடந்தேறிய 23 புதுமைகள் உண்மையானவையென்று அங்கிகரிக்கப்பட்டுள்ளன.

அந்நாளிலே இவருக்குப் புனிதர்பட்டம் அருளப்படுமாறு நாடுமுழுவதும் ஆயத்தஞ்செய்து கொண்டிருந்தது. “வெஸ்ற்மினிஸ்றர் அபே”என அறியப்படும் புரொட்டஸ்தாந்த பேராலயத்திலே இவருடைய புனித உடலைச் சேமிப்பதற்கென ஒரு சிற்றாலயம் அமைக்கப்பெற்று, வின்சரிலிருந்து இச்சிற்றாலயத்துக்கு அது மாற்றப்படவிருந்தது.

இவருக்குப் புனிதர்பட்டம் அருளப்படுமாறு அப்பொழுது தொடக்கி இடையிலே நிறுத்தப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து நடத்தி முடிக்கும்படியாகக் கத்தோலிக்கர் மட்டுமல்ல, புரொட்டஸ்தாந்தருமே அருட்டிக் கொண்டிருக்கின்றனர். உள்ளபடியே அங்கிளிக்கன்- கனன் பாதிரியார் ஒருவர் இது விஷயமாய் அப்போது அருளப்ப பாப்பானவரைக் கேட்டுக் கொண்டார். இதுவரை நடைபெற்ற விசாரணை எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருப்பதாலே முதலிலிருந்து இந்த விசாரணையைத் தொடக்க வேண்டிய அவசியமில்லையென்றும், அதனைத் தொடர்ந்துநடத்தினால் விரைவிலே பூர்த்திசெய்யலாமென்றும் சொல்லப்படுகிறது. இவருக்குப் புனிதர்பட்டம் அருளுவதானது கிறிஸ்தவ ஐக்கியத்துக்குப் பேருதவியாகுமென நம்பப்படுகிறது.

குஷ்டரோகரின்
அப்போஸ்தலர்

குஷ்டரோகரின் அப்போஸ்தலரென்று அகில முழுவதும் கொண்டாடப்பட்டுவரும் ஆசா. தமியான் அடிகளாரின் ஞாபகார்த்த சின்னங்கள்பல அவர்பிறந்த நாடாகிய பெல்ஜியத்திலே நிறுவப்பட்டுள்ளன. இவர் மரணித்தபின் அவரின் புனித உடல் மொலொக்காய் தீவிலிருந்து 1936ஆம் ஆண்டு பெல்ஜியதேசம் கொண்டு செல்லப்பட்டு, அங்கு லூவெயின் நகரிலுள்ள புனித அந்தோனியாரின் சிற்றாலய நிலவறைச் சின்னக் கோவிலிலே பூமிதானஞ் செய்யப்படலாயிற்று. அவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுவதற்கான விசாரணை ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளது.

அவர் பிறந்த நகரின் பிரதான சதுக்கத்துக்கு அவருடையநாமம் சூட்டப்பட்டும், அவர் பிறந்த இல்லம் 1952 ஆம் ஆண்டு ஒரு தேசிய ஞாபகசின்னமாக பிரகடனஞ் செய்யப்பட்டுமிருக்கிறது. இந்த இல்லம் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே கட்டப்பட்டது. சுவாமிகளின் குடும்பம் வசித்திருந்த அறைகளும், அவற்றின் தளபாடங்களும், அவரின் படுக்கை அறையும் பூச்சியமாகப் பாதுகாக்கப்படுகின்றன. அதன் நிலவறை ஒரு சிறு கோவிலாக்கப்பட்டு, அதிலே 1889ஆம் ஆண்டு சித்திரை மாதம் அவரின் புனித உடல் வைக்கப்பட்ட பிரேதப் பேழை இருந்துவருகிறது. அவருடைய இல்லத்தின் சிறிய பொருட்காட்சி நிலையம் 1952ஆம் ஆண்டு திறக்கப்பட்டு, மொலொக்காய்தீவின் மாதிரி உருவம் ஒன்றையும் அவரின் உடைகள், பூசைவஸ்திரங்கள், பூசைப் பாத்திரங்கள், தினசரிக்குறிப்புப் புத்தகம், மொலொக்காய்தீவில் அவர் கட்டியகோவிலின் பலிபீடம், 1888ஆம் ஆண்டு எட்வாட் கிளிபொட் என்பவரால் வீந்தாரிக்கப்பட்ட வாட்டர்கலர் பிரதிமைப்படங்கள் உட்பட அநேக வர்ணந்திட்டிய படங்கள், பிரதிமைப் படங்கள், அவருடைய சிரிய வாழ்க்கையின் முக்கிய சம்பவங்களைப் பிரதிபலிக்கும் பெரியதோர் சித்திரத் தொங்கு சீலை ஆகியவைகளை அடக்கியிருக்கின்றன. மூன்றாவது காட்சிப்பகுதி மொலொக்காய்தீவுபற்றிய அதிகம் பூரணமான உண்மைச் சித்திர விளக்கத்தையும், பிக்புஸ்சபையைச் சேர்ந்தவரான அடிகளார் சஞ்சரித்துத் தொண்டாற்றிய சூழலைத் தரிசகர்கள் ரூபிகரிக்க உதவியாக அத்தீவிலிருந்து கொண்டுபோகப்பட்ட அநேகவிதமான உற்பத்திப் பொருள்களையும், பிறவஸ்துகளையும், தாவரங்களையும், விதைகள், முட்டைகள், நத்தைகள், சிப்பிகள் முதலியவற்றின் மேல்ஓடுகளையும், பவழப்பாறைகளையும் அடக்கியிருக்கின்றன.

யோசெவ் டெ வெயுஸ்றர் என்பதே சுவாமிகளின் ஞானஸ்நானப் பெயராகும். அவர் 1840ஆம் ஆண்டு சித்திரைமாதம் 3ஆம் திகதி பெல்ஜியதேச திறெமெலு எனுமிடத்தில் பிறந்தார்: “தமியான் அடிகளார்”என்ற நாமத்தாலே அவர் 19ஆம் நூற்றாண்டில் வசித்திருந்த புனிதமிக்க பிரபலஸ்தர்களில் ஒருவராக அறியப்படலானார். தமது பிள்ளைப்பராயத்திலேயே அவர் ஞான வாழ்க்கையில் சிறந்துவிளங்கினார். “பிக்புஸ் குருமார்” என அறியப்படுகின்ற திரு இருதயகுருமார் சபையில் சேர்ந்து, சான்ட்விச் தீவுகளிலே திருத்தொண்டாற்றி வந்து நோவாய்ப்பட்ட தமது சொந்தச் சகோதரனின் இடத்தைவகிக்க 1863 ஆம் ஆண்டு அனுமதி பெற்றுக் கொண்டார். 1864ஆம் ஆண்டு வைகாசி மாதம் 21ஆம் திகதியன்று ஒனலூலுநகரிலே அவர் குருப்பட்டம் பெற்றதும் உடனடியாகத்தானே மொலொக்காய் தீவிலுள்ள குஷ்டரோகர்களுக்குச் சேவைசெய்யத் தமது மேற்றிராணியாரான மாய்கிறெட் ஆண்டகையிடம் அனுமதிவேண்டினார்.

அங்கே ஆச்சரியத்துக்குரிய ஆர்வத்துடனும், மனோற்சாகத்துடனும் அவர் பதினாறு ஆண்டுகள் தொண்டாற்றி நம்பிக்கைக்கு இடமற்றதும், மாசுபடிந்ததுமான அத்தீவைக் கிறிஸ்தவ சகிப்புத்தன்மையும், அமைதியும், புனிதமுமான ஓரிடமாக—பாலைவனத்திலே ஓர் பசியபூஞ்சோலையாக மாற்றியமைப்பதில் வெற்றிகண்டார். பிந்த அவருமே குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டார். அத்தால் அவர் உருக்குலைந்து, என்புதோலாகி எவராலுமே அடையாளம் கண்டுபிடிக்க முடியாதவரானார். இந்தத் தொழுநோயால் ஆறுவருடகாலம் அவர் நாவினால் எடுத்துக்கூற முடியாத பாடுகள், வேதனைகளைப் பொறுமையுடன் அனுபவித்துவந்து, இன்னும் 50வயது அடையாமுன்னரே 1889ஆம் ஆண்டு சித்திரை மாதம் 15ஆம் திகதி தமது மக்களிடையே மரணிக்கலாயினர். குஷ்டரோகரின் அப்போஸ்தலரான ஆசா. தமியான் அடியார்களின் சுருக்கமான வாழ்க்கை வரலாறு இது குவாம்.

[“லொசெர்வார்த்தோரெ ரோமானோ”எனும் வத்திக்கான் பத்திரிகையிலே கண்ட ஒரு கட்டுரையின் தமிழாக்கம்]

### இதுவே நியாயம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பர் அடிகள், அங்கிளிக்கன் சபைத்தலைவர் டக்டாரு மசேஅடிகள் முதலியோருக்கு அச்சபையில் இடம் அளித்திருப்பதால் கத்தோலிக்கசபைத் தலைவருக்கும் இடம் அளிப்பதே நியாயமாகும் என்பது அவரது கோட்பாடு.

### மாணவர் ஒழுக்கத்தில்....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வாறு உதவுகின்றன என்பதைத் தெளிவாக விளக்கினார். பள்ளிக்கூட விளையாட்டுக்களினால் படித்துக் கொண்ட ஒழுக்கத்தின் பயனாகவே அரசியல் வாதிகள் தன்னும் தமது எதிர்க்கட்சியினருடைய அபிப்பிராயங்களை மதித்துக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது என்று சுட்டிக்காட்டினார்.

※ சன் பிரான்சிஸ்கோ நகரில் உள்ள மிருகக்காட்சிச் சாலை ஒன்றில்உள்ள மிருகங்கள் ஆடையுடன்காட்சியக்கின்றன.

## இளைப்பாறிய ஆசிரியர் திரு. சின்னையா மாசில்லாமணி அவர்களின் தேகவியோகம்

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை கடற்கரை வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும், தலைமை ஆசிரியராகப் பலவருடங்கள் தொண்டாற்றியவரும், கோவிற் சங்கீத வல்லுனரும், உத்தம கத்தோலிக்க சீவியம் சீவித்தவருமான திரு. சின்னையா மாசில்லாமணியவர்கள் தமது 87-ம் வயதில் 19-7-70 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் தம் கடமையிற் தவறாத உத்தம ஆசிரியராகவும் விசேடமாகப் பாலர் வகுப்புகட்கு பாடல், கோலாட்டம் முதலிய பயிற்றுதற்கு ஒப்பற்ற திறமைசாலியாகவும், மாணவர்களை நல்லொழுக்கத்திலும், கிறீஸ்துவ ஒழுக்கத்திலும் பயிற்ற எப்போதும் கரிசனையுள்ள வழிகாட்டியாகவும், அயராத உழைப்பாளியாகவும், பல கத்தோலிக்க பாடசாலைகளில் கடமையாற்றி ஞான அதிகாரிகளாலும், கல்வி அதிகாரிகளாலும் பெருமதிப்புப் பெற்றவர்.

இவரது முன்மாதிரிகையான வாழ்வு குன்றிலிட்ட தீபம்போல் பிரகாசித்ததினால் பலர் திருந்திவாழ உதவியது. எவ்வித கஷ்டமிருந்தாலும் தினப்பூசை காண்பதையும் திவ்விய நற்கருணை அருந்துவதையும் தவிர்க்கமாட்டார். திவ்வியபூசை முடிவில் திருச்சிலுவைப்பாதைப்பத்தியை அனுசரியாமல் கோவிலை விட்டு வெளியே போகமாட்டார். காவலன், இருதயதூதன் இவற்றிற்கு எப்போதும் சந்தாதாரராய் இருந்துள்ளார். புனித பிரான்சிஸ்குவின் மூன்றாஞ்சபையிற் சேர்ந்து தாழ்வான சீவியம் சீவித்து வந்தார்.

தற்பொழுது எத்தியோப்பியாவிலுள்ள உயர்நிலைக் கல்லூரியில் ஆசிரியத் தொண்டாற்றும் திரு. மா. பிரான்சிஸ் சேவியர், சங்கீதம் பயிற்றும் மா. மரியாம்பிள்ளை, நல்லூர் சி. சி. பாடசாலை ஆசிரியை திருமதி தெரேசம்மா கிருபைரெட்ணம் என்போர் இவருடைய பிள்ளைகளிற் சிலராவர்.

இவரது பூதவுடல் 20-7-70 திங்கட்கிழமை பி. ப. 5மணியளவில் திரளான இனசன சிநேகிதர் புடைசூழ செபம், பாடல், வாத்தியங்களுடன் பாண்டியந்தாழ்வு புனித அன்னம்மாள் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு வண. பிரான்சீஸ் குலாஸ் சுவாமியவர்கள் கடைசி ஆசீர்வாதம் அருளினார்கள். பின் சடலம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிற் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரது ஆன்மா சாந்தியடைவதாக. இவரையிழந்து துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் நாமும் அனுதாபப் படுகின்றோம்.

—கடிதர்.

## ஜே. கிறிஸ்டோப்பர் சில்வாபிள்ளை அவர்களின் 11-ம் வருட மரண ஞாபகம்

“சீவியத்தில் என்னை நேசித்த அன்பர்களே, என்மரணத்திலும் என்னை மறவாதீர்கள்”

நித்திய பிதாவே, விலைமதியாத திருஇரத்தத்தாலும் திருக்கண்ணீராலும் சோர்ந்த உமது திருக்குமாரன் யேசுக்கிறிஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து மரணமடைந்த கிறிஸ்டோப்பர் சில்வாபிள்ளையுடைய ஆத்துமத்துக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

இவர் பிரிவால் துயருறும் தாய், சகோதரி, மைத்துனர்.

தோப்பு.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

கல்லறை ஆண்டவரின் இரக்கத்தினாலும், திருக் குடும்பத்தின் மன்றாட்டினாலும் எனது மகனுக்கு ஏற்பட்ட ஆபத்தான வருத்தம் குணமடைந்து விட்டது. இன்னும் பூரண சுகம் கிடைக்க மன்றாடுகிறேன். இவர்களின் நாமம் தோத்திரிக்கப்படுவதாக. நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்
ஊர்காவற்றுறை

## சூ பேதுருப்பிள்ளை (பீற்றர்) அவர்களின் 4-ம் வருட மரண நினைவு

தோற்றம்: 31-8-1912 மறைவு: 11-8-1966

வாழ்வில் நேசித்த உம்மை மரணத்திலும் மறவோம்.

மண்ணில் மறைந்தாலும் எமது அகக்கண்களை விட்டகலாப் பேதுருப்பிள்ளை (பீற்றர்) அவர்கள் இறைவனடிசேர்ந்த நாலாவது வருடம் 11-8 70 செவ்வாய்க்கிழமை பூர்த்தியாகிறது. அன்றைய தினம் காலை 6 மணியளவில் வல்வை, அர்ச். செபஸ்தியார் ஆலயத்தில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இதனைக் கண்ணுறும் குருமார், சந்நியாசர், கன்னியர், விசுவாசிகள் அனைவரும் அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி: பே. அன்னபூரண இராசநாயகம்,
பெருமகன்: அ. ஞானமுத்துப்பிள்ளை செல்வராசா.

* * *

## பேர்னதேத்தம்மா பிரான்சிஸ் அவர்கள் அமலனடி சேர்ந்த 8-ம் வருட ஞாபகம்

பிறப்பு: 6-7-1916 இறப்பு: 12-8-1961

இவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக நிகழும் ஆவணிமாதம் 12-ந் தேதி புதன்கிழமை (12-8-70) காலை 6 மணியளவில் பருத்தித்துறை, அர்ச். தொம்மையப்பர் ஆலயத்தில் ஒரு துக்கப் பாடற்பூசை நிறைவேறும். இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர், மற்றும் பந்துமித்திரர் அனைவரும் இவவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

“நித்திய இளைப்பாற்றியை இவவுக்குக் கொடுத்தருளும் சுவாமி; சமாதானத்தில் இளைப்பாறுவாவாக!”

இவவின் பிரிவால் துயருறும்
அருமைப் பத்தா: ம. பிரான்சிசும், பிள்ளைகளும்,
சகோதர சகோதரிகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகாதே போகாதே என் புதல்வா!

"என் மகனே, அதெல்லாம் தெரியாத்தனமாய், சிறுபிள்ளைப் புத்தியாய் நடந்து போய்விட்டது. அதையெல்லாம் நான் மனப்பூர்வமாக மன்னித்துவிடுகிறேன். மறந்துவிடுகிறேன். ஆனால், பெற்ற பிள்ளையாகிய உன்னை என்னுடைய கூலியாட்களுள் ஒருவனாக ஏற்று நடாத்த அப்படியென்ன உன் தந்தை ஈவிரக்கமற்ற ஒரு கன்னெஞ்சரா? தயை தாட்சணியமில்லாத வன்னெஞ்சம் படைத்தவரா? போனதெல்லாம் போகட்டும் மகனே, காணமற்போன உன்னைத் திரும்பவும் நான் கண்டடைந்ததே போதும்."

அஃது ஓர் அழகான ஆனால், ஆடம்பரமே அறியாத ஒரு மனை. அதனையும், அதன் சுற்றுடலையும் சுற்றிப்பார்க்குமிடத்து, அது ஒரு செல்வந்தரின் மனையென்றே சொல்லலாம். ஆனால், இந்த மனை நெடுங்காலமாகச் சந்திரனில்லாத வானம் போலும், தாமரையில்லாத தடாகம் போலும் சோபையிழந்து, பொலிவிழந்து சோகமேவடிவாய்க் காட்சியளிப்பது ஏனோ? அதன் மேல்மாடியில் எப்போதுமே ஓர் அபயக்குரல், இல்லை; ஓர் அழுகைக்குரல் ஏனோ? அது புத்திர சோகத்தால், பிள்ளைப் பாசத்தால் உண்டானதாய் இருக்குமோ?

சொல்லியேசொல்லிப்பார்த்தேன், என் சொல்லைத் தட்டி நீ போனாயே மகனே, நீ இப்போது எங்கே இருக்கிறாய், என்னவாய் இருக்கிறாய், இனி நான் உன்னை எப்போது காண்பேன், இப்பிறவியில் உன்னை இனிக் காண்பேனோ என்று கவலையே உருவாய், அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் பெருமூச்செறிந்தபடியே பாவம், வயோதிபர் ஒருவர் அந்த மாடியின் சன்னல் வழியாக வெளியில் நோக்கியவண்ணம் அமர்ந்திருக்கின்றார். கண்ணீரால் அவர் கன்னங்கள் குழி விழுந்தும் ஊணுறக்கமின்றிப்போலும் உடல் நலிந்தும் காணப்படுகின்றன.

இவ்வாறு அவர் நெடுநாள் சிந்தாகுலத்தராய் இருந்து வருங்கால் ஒருநாள் விழித்த கண் விழித்தபடியே, வடித்த கண்ணீர் வடித்தபடியே அந்த மாடியின் சன்னல் வழியாக வெளியில் நோக்கியபோது, தூரத்தில் ஒரு மானிட உருவம் அவர் கண்ணுக்குத் தோற்றுகின்றது. கந்தை உடை, தளர்ந்த நடை, மெலிந்த உடல், கையில் ஓர் ஊன்றுகோல், கவலை தோய்ந்த முகம், உட்குழிந்த கண், பரட்டை மயிர் இவ்விதம் ஆண்டி பரதேசி கோலமாய் யாசகஞ் செய்ய வருவான்போல் அந்த மனையைநோக்கி வந்துகொண்டிருந்த அவனும் இதோ, அண்மையில் வந்துவிட்டான். அவனைக் கூர்ந்து நோக்கியபடியே நின்ற அவரும் கிட்ட வந்ததும் அவன் முகத்தை உற்றுப்பார்க்கின்றார். அவர் உள்ளத்தில் ஒரு பெரும் போராட்டம். ஆம், அவன்தான் இல்லை, அவனில்லை! ஈற்றில் முகரூபத்தைக்கொண்டு ஆளை இனங்கண்டுகொண்டவர்போல் மனம் துடிதுடித்தார். உளம் பதைபதைத்தார். அவனுடைய பரிதாப கோலங்கண்டு, ஐயோவென்று தலையில் கை வைத்தபடியே விழுந்தடித்துக்கொண்டு மாடிப்படிகளால் கீழே இறங்கினார். இருகரங்களையும் விரித்துநீட்டியபடியே அவனை எதிர்கொண்டு சென்றார்.

என் மகனே, என் செல்வமே வந்துவிட்டாயா? உன் செல்லத் தந்தையைத் தேடி வந்திருக்கிறாயா? என்று பெருவாய் பெருஞ்சத்தமாய்க் குரலெழுப்பி அழுதுகொண்டே அவனை வாரியணைத்தார். அவன் கழுத்தில் தாவி விழுந்தார். அவனுடைய கன்னங்கள் இரண்டையும் மாறிமாறி முத்தமிட்டார். ஆனந்தக் கண்ணீரால் அவனைக் குளிப்பாட்டினார். பின்னும் என் மகனே, நீ எப்போது வருவாயோவென்று இத்தனை வருடகாலமாய் உன் வரவை எதிர்பார்த்து, வழியே வழி பார்த்து வைத்தகண் வைத்தபடியே நாள் எண்ணிக்கொண்டிருந்தேன். உன்னைக் காணாது எத்தனை நாள் ஊணுறக்கமின்றிக் கலங்கி அழுதேன். கண்ணீர் சிந்தினேன். மகனே, நீ மனந்திரும்பி உன்பிதாவின் வீட்டுக்கு வந்ததே போதும். எனது கண்குளிர உன்னைக் கண்டுகொண்டதே போதும் என்றெல்லாம்சொல்லி அவனை இறுகத் தழுவியபடியே வீட்டுக்கு வரவழைக்கின்றார்.

அப்பொழுது அவன் தன் நல்ல பிதாவின் அன்பையும், அரவணைப்பையும், தான் செய்த பிழையையும், தவறையும் உள்ளூர நினைந்து மனமுடைந்தவனாய் அணைகடந்த வெள்ளம்போல் கண்ணீர் ஆறாய்ப் பெருக இருகரம்விரித்தபடியே அவருடைய கால்களில் விழுந்து, "அப்பா பிதாவே, நான் பரலோகத்துக்கு விரோதமாகவும், உமது சமுகத்திலும் பாவஞ் செய்தேன். இனி உம்முடைய பிள்ளையென்று அழைக்கப்பட நான் பாத்திரவானல்ல. உம்முடைய கூலியாட்களில் ஒருவனாக என்னை ஏற்றுக்கொள்ளும்" என்று அவருடைய பாதங்களைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதான்.

இந்த மொழிகள் அவர் செவியில் விழுந்ததே அவர் உள்ளம் அனல்வாய்ப்பட்ட மெழுகுபோல் உருகியது. ஐயோ, என் பிள்ளை தன் பிழையை இவ்வளவு தூரம் உணர்ந்து கவலைப்படுகிறானே யென்று எண்ணஎண்ண அவர் மனம் புண்ணாய் வருந்தியது. கீழே குனிந்து இருகாங்களாலும் அவனைத் தூக்கி நிறுத்தினார். அழாதே மகனேயென்று ஆறுக்காரியஞ்சொன்னார். அவன் முகத்தைத் தடவிக்கொடுத்தார். அஞ்சேலென்று தட்டிக்கொடுத்தார். ஆறாய்ப் பெருகிய அவன் கண்ணீரைத் துடைத்தார்,

அதன்மேல் அன்பும், அருளும் நிறைந்த ஒரு பார்வையுடன் அவனை விழித்து, "என் மகனே, அதெல்லாம் தெரியாத்தனமாய், சிறுபிள்ளைப் புத்தியாய் நடந்து போய்விட்டது. அதையெல்லாம் நான் மனப்பூர்வமாய் மன்னித்து விடுகிறேன்; மறந்துவிடுகிறேன். ஆனால், பெற்ற பிள்ளையாகிய உன்னை என்னுடைய கூலியாட்களுள் ஒருவனாக ஏற்று நடத்த அப்படியென்ன உன் தந்தை ஈவிரக்கமற்ற ஒரு கன்னெஞ்சனா? தயை தாட்சணியமில்லாத வன்னெஞ்சம் படைத்தவரா? போனதெல்லாம் போகட்டும் மகனே, காணமற்போன உன்னைத் திரும்பவும் நான் கண்டுகொண்டதே போதும். என் செல்வமே, உன் அன்புத் தந்தை உன்னை அன்புடன் வரவேற்று அன்பின்முத்தம்தந்து உன்னை வரவழைக்கின்றார்; வாடா என் கண்ணே, உன் தந்தையின் வீட்டுக்குச் சந்தோஷமாக."

அதன்மேல் அவன் கழுத்தைக் கட்டித் தழுவியபடியே அவனைத் தனது மனைக்கு அழைத்துப்போகின்றார். போனதும் தனது ஊழியர்களைக் கூவியழைக்கின்றார். அழைத்து, "நீங்கள் சீக்கிரமாய் முதல்தரமான வஸ்திரத்தைக்கொண்டுவந்து இவனுக்கு உடுத்துங்கள். இவன் கைக்கு மோதிரத்தையும், கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள். கொழுத்த கன்றையும் கொண்டுவந்து அடியுங்கள். உண்டு விருந்தாடுவோமாக. ஏனென்றால், என்குமாரனாகிய இவன் இறந்துபோய் மறுபடியும் உயிர்த்தான். காணமற்போய் மறுபடியும் காணப்பட்டான்" என்றார். அவர் ஆணைப்படியே யாவும் நிகழ்ந்தது. அதனால் அன்றுதினம் ஒரு பெருநாளைப்போல் ஆனந்தமாயிருந்தது. குழல், கொம்பு, தவில், தம்புரா முதலாம் மங்கல வாத்தியங்கள் முழங்க, எங்கும் ஆடலும் பாடலும் ஆர்ப்பரிப்புமாயிருந்தது.

அப்பொழுது தூரத்திலே வயலில் வேலை செய்த அவருடைய மூத்த குமாரன் ஆயாசத்துடன் வீடு திரும்புகிறான். அப்பொழுது வாத்தியங்களின் ஓசையும், ஆடல் பாடல் ஆர்ப்பரிப்பும் அவன் செவியில்விழ, சிறிதுவேளை திகைத்து நின்றவன் பணிவிடைகாரரில் ஒருவனை விழித்து, என்ன விசேடம்? பெரிய ஆரவாரமாய் இருக்கிறதேயென்று கேட்கின்றான். அதற்கு அவன்: "உம்முடைய தம்பி வந்திருக்கிறார்; அவர் சுகத்தோடு வந்து சேர்ந்ததைப்பற்றி உம்முடைய தகப்பனார் கொழுத்த கன்றை அடிப்பித்தார்" என்றான். அப்பொழுது அவன் எரிச்சல் கொண்டு உள்ளே பிரவேசிக்க மனமில்லாதிருந்தான்.

ஆகையால், அவனுடைய தகப்பன் வெளியே வந்து, அவனை வருந்தியழைக்கத் தவக்கினார். அவனோ தகப்பனைப் பார்த்து, [illegible] இத்தனை வருட காலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து, உம்முடைய கற்பனையை ஒருக்காலும் மீறாதிருந்தும், என் சிநேகிதரோடு கூட நான் விருந்தாடும்படிக்கு ஒரு வெள்ளாட்டுக் குட்டியையாவது நீர் எனக்கு ஒருபோதும் தந்ததில்லை. ஆனால், வேசிகளோடு தன் ஆஸ்தியை விழுங்கிவிட்ட உம்முடைய மகனாகிய இவன் வந்தவுடனே கொழுத்த கன்றை அடிப்பித்தீரே என்றான்."

அதற்கு அவர்: "மகனே, நீ எந்நாளும் என்னோடு கூட இருக்கிறாய்; எனக்குள்ள யாவும் உன்னுடையதாய் இருக்கிறது; ஆனால், உன் தம்பியாகிய இவன் செத்துப்பிழைத்ததற்கும், காணமற்போய்க் காணப்பட்டதற்கும் நாம் விருந்தாடிச் சந்தோஷம் கொண்டாட வேண்டுமே" என்று அவனுக்குச் சமாதானஞ்சொல்லி உள்ளே அழைத்துப்போகின்றார். அங்கே தமையனும் தம்பியும் ஒருவரையொருவர் சந்திக்கின்றனர். உடன் பிறந்த பிறவிகள் அல்லவா? சகோதர பாசம் விஞ்சுகின்றது. இருவர் கண்களும் மாத்திரமல்ல, இருவர் கண்ணீர்களும் இரண்டறக் கலக்கின்றன. "அண்ணா, நான் தெரியாமற் செய்த பிழையை ........" அப்பால் சொல்ல நாவெழாமல் தத்தளித்தான் தம்பி. இதைக் கேட்டதும் அவனை இறுகத் தழுவி, இரு கன்னங்களிலும் முத்தமிட்டு, "தம்பி, உன்னை மன்னித்து..." என்று சொல்லித் தவித்தான் தமையன். அன்றுமுதல் அந்த மனையிலே சந்தோஷமும், அமைதியும், சமாதானமும் நிலவியது.

சுபம்!

# மலையிலே மனுமகன்

இ. பேர்னுட்

நம் இரட்சகர் யேசுவின் வாழ்க்கை மலைகளுடன் அதிக தொடர்பு கொண்டதாயிருந்தது. கல்வாரிமலையிலே சொல்லொணா வேதனைப்பட்டு இறந்தது அவர் வாழ்வின் முக்கிய சம்பவம் மட்டுமல்ல, நம் ஒவ்வொருவரினதும் வாழ்க்கையின் அதி உன்னத சம்பவமுமாயிருக்கிறது. அந்தக் கல்வாரி நம்கணகளுக்கு மறைவாக இருக்கலாம், ஆனால், அந்தக் கல்வாரியின் ஞாபகம இன்று நமது பீடங்களில் அதனை நினைவுபடுத்திக்கொண்டேயிருக்கிறது.

அவரது அரிய உரை கேட்க திரண்டிருந்தது மக்கள் கூட்டம். மலைப்பாங்கான பிரதேசம். பசியைப் பாராது அவர் திரு உரையையே உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தனர். ஆம், அதுதான் மகத்துவம் வாய்ந்ததென மக்களால் மதிக்கப்படும் மலைப்பொழிவு.

மரணத்தை வெற்றி கொண்ட யேசு தம் சீடரை விசுவாசத்தில் திடப்படுத்தி, தேற்றிடும் தூய ஆவியை அனுப்புவதாக வாக்களித்து, தாம் விண்ணகம் சென்று அனைவருக்கும் அரியாசனம் ஆயத்தம் செய்வதாகக் கூறி, அனைவரையும் ஆசீர்வதித்து ஆரோகணமானார். அதுதான் ஒலிவேத்மலை. அதுதான் கிறீஸ்துவின் ஆரோகணத்துக்கு அசைக்கமுடியாத சாட்சி. நாம் அனுதினமும் சொல்லும் 'வானகத்திற்கு எழுந்தருளி, பிதாவின் வலப்பக்கம் வீற்றிருக்கிறார்' என்னும் விசுவாச சத்தியம்.

தம் சீடரில் முக்கியத்துவம் வாய்ந்தவர்களான இராயப்பர், அருளப்பர், யாகப்பர் ஆகிய மூவரையும் அழைத்துக்கொண்டு ஒரு மலையின்மேல் ஏறினார் (மத். 17:1; மாற். 9:1). இதுதான் தபோர் மலை. தம் சீடரை மலையடியில் விட்டு, மலையில் ஏறிச் செபம் செய்தார். அவர் செபம்பண்ணுகையில் அவர் முகரூபம் மாறி, அவர் வஸ்திரம் வெண்மையும் காந்தியுமாயிற்று (லூக். 9:29). யாருமற்ற அந்த இடத்தில் இருவர் அவருடன் பேசிக்கொண்டிருந்ததைக் கண்ட சீடரில் ஒருவரான இராயப்பர் அவர்கள் மறையும்போது, 'குருவே, நாம் இங்கே இருப்பதுதான் நல்லது, உமக்கும் எலியாசுக்கும் மோயீசனுக்குமாக மூன்று கூடாரங்களை அடிப்போம்' என்றார். மேகம் ஒன்று வந்து அவர்களை மறைத்தது. அன்று யோர்தான் நதியில் திருமுழுக்குப் பெற்றபோது ஒலித்த வார்த்தைகள் இங்கும் ஒலித்தன. 'இவரே நமது நேசகுமாரன்; இவருக்குச் செவிகொடுங்கள்'. பிதாவாகியசருவேசுரன் தமது குமாரனை மனிக்குலத்துக்கு வெளிப்படுத்திய சந்தர்ப்பம் இதுதான்.

கிறீஸ்துநாதர் வேதப் பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்ற வந்தவர் என்பதைக் காட்டவே வேதப்பிரமாணத்தின் தந்தையெனப் போற்றப்பட்ட மோயீசனும், தீர்க்கதரிசிகளில் முக்கியத்துவம் வாய்ந்தவரான எலியாசும் காணப்பட்டு, கிறீஸ்துதான் உண்மையான இரட்சகரென்று அவருக்குச் சாட்சிகளாக விளங்கினார்கள்.

இச்சம்பவம் முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருப்பதினாலேதான் திருச்சபை இதற்கு முக்கியத்துவம் அளித்து, தனது திருநாட்கள் வரிசையில் இத்திருநாளையும் சேர்த்துச் சிறப்பானமுறையில் கொண்டாடிவருகிறது. கிறீஸ்துவின் மறுரூபத்திற்குச் சாட்சிகளாக விளங்குபவர்கள் புனித இராயப்பர், யாகப்பர், அருளப்பர் ஆகிய மூவருமே.

இவற்றைவிட கிறீஸ்துவின் வாழ்விலே இன்னும் எத்தனையோ சம்பவங்கள் மலையுடன் தொடர்புகொண்டிருந்தனவாயினும் கல்வாரி, ஒலிவேத், தபோர் ஆகிய மூன்று மலைகளுமே முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன.

எவ்வளவு இழிந்த நிலையில் கல்வாரியில் உயர்த்தப்பட்டாரோ அதற்கதிகமாக தபோர் மலையிலும் ஒலிவேத்மலையிலும் மகிமைப்படுத்தப்பட்டார்.

ஞான வாழ்வின் மட்டுமல்ல, உலகவாழ்விலும் மலைகள் முக்கிய இடம் பெறுகின்றன. மலைப்பிரதேசங்கள் மழையை வருவிக்கின்றன. குறிப்பிட்ட சில பயிரினங்கள் மலையிலே செழிப்புற்று வளருகின்றன. மலைக்காட்சிகள் பார்ப்பதற்கு மனோரம்மியமாய் இருக்கும். மலைகள் கிறீஸ்துவின் வாழ்க்கையில் முக்கிய இடம் பிடித்ததிலும் வியப்பில்லை என்பது தெளிவாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்களம்!
# வாழ்க்கை என்னும் போர்க்களம்!!

புனித பேர்னட்டின் வரலாறு அனேகருக்குத் தெரிந்திருக்கும். அவருடைய வாழ்க்கையில் இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றது. பசாசு ஒருநாள் அவரை ஒரு சுற்றுப் பயணத்துக்கு அழைத்தது. அவரும் சம்மதித்தார். பயணம் ஆரம்பமாயிற்று. அக்காலத்திலிருந்த பெரிய நகரம் ஒன்றுக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார். எங்கே பார்த்தாலும் ஆடல், பாடல், உல்லாசம், குடிவெறி, கேளிக்கை, சிற்றின்பக்களிப்பு; ஒழுக்கக்கேடு இவைதான் அவர் கண்ட காட்சி. மக்கள் யாவரும் பாவப் பழக்கத்திலும், பாவச் செயல்களிலும் ஊறித் திளைத்திருந்தனர். உலக இன்பங்களைத் தவிர வேறு எதுவும் மக்களுக்குப் புலனாயிருக்கவில்லை. அதேவேளை எங்காவது சாத்தானையும் காணவில்லை, கெட்ட அரூபிகளும் தென்படவில்லை.

சுற்றுப்பயணத்தின் இறுதியில் நகரின் ஓரத்துக்கு வந்தனர். அங்கே நகர் எல்லையில் ஒரு பசாசு — கிழப் பசாசு வெய்யில் காய்ந்து கொண்டிருந்தது. பாதி நித்திரையில் அந்தப் பசாசு காணப்பட்டது. உடனே அதிசயத்தில் ஆழ்ந்த புனிதர் இக்காட்சியின் பொருள் என்ன என வினவினர்.

அதற்குச் சாத்தான், "இந்தப் பட்டினத்திலே வாழும் மக்கள் எனது வேலையைச் செய்கிறார்கள். அவர்களுடைய பாழ்பட்ட வாழ்க்கையால் தங்களைச் சார்ந்தவர்களைப் பாழ்படுத்துகிறார்கள். இனம், சுற்றம், உறவு எல்லாமே சீர்கெட்டு, சிதைக்கப்படுகிறது. அவர்களோடு தொடர்பு கொள்ளும் எவரும், உறவு கொள்ளும் ஒவ்வொருவரும் கெட்டுவிடுகிறார்கள். அவர்களுடைய சொந்தப் பிள்ளைகளே கெடுக்கப்படுகிறார்கள். எங்களுக்கு இங்கே அதிக வேலையில்லை. ஏனெனில், இங்கே உள்ளவர்கள் அறியாமல் எனது அதிகாரத்திலும், ஆட்சியிலும் தங்களை அர்ப்பணித்து விட்டனர். தங்களைத் தாங்களே எமக்கு அடிமைப்படுத்திவிட்டனர். நித்தியத்துக்கும் நான் அவர்களைத் துன்பப்படுத்துவேன். ஆனாலும், வெளியில் இருந்து ஆன்மீக எண்ணங்கள், சன்மார்க்க ஏவுதல்கள் இரட்சிப்பு உதவிகள் கிடைக்காமல் இருக்க இந்தக் கிழப்பசாசை நாம் காவல் வைத்துள்ளோம்" என்று பதில் கூறியது.

சுற்றுப் பயணத்தின் பின் பசாசு புனிதரை அவருடைய மடத்துக்கு அழைத்து வந்தது. புனித பேர்னட் மடத்தை அடைந்த சமயம் கூட்டம் கூட்டமாக அசுத்த அரூபிகள் முகிற்கூட்டம் போல் இறங்குவதையும் ஏறுவதையும் கண்டார். இன்னும் நெருக்கமாகத் தமது மடத்தை அண்மியதும் பூமியில் இருந்தும், மடத்தின் வெவ்வேறு அறைகளிலிருந்தும் பசாசுகள் அங்கும் இங்குமாய் ஓடித்திரிவதைக் கண்டார். மடத்தில் உள்ள ஒவ்வொரு சந்நியாசியையும் தவறுகள் இழைக்கத் தூண்டிக் கொண்டிருந்தன பசாசுகள்.

ஒவ்வொரு துறவியிடமும் சென்று சோம்பலை ஒருவரிடமும், சந்தேகத்தை ஒருவரிடமும், பொறாமையை இன்னொருவரிடமும், அசட்டைத்தனத்தை இன்னொருவரிடமும், பெருமையை ஒரு துறவியிடமும், அமைச்சலீனத்தை மற்றவரிடமும், அதிகாரத்தை மதிக்காத குணத்தை ஒருவருக்கும், பிறரன்பை மறுதலிக்க இன்னும் ஒருவரையும் தூண்டிக் கொண்டும் துறவிகள் ஒவ்வொருவரையும் ஒவ்வோர் வகையில் பாவத்தில் விழுத்த ஏவிக்கொண்டுமிருந்த காட்சியை அவர் கண்டார்.

பயம் மிகுந்த புனிதர் பசாசிடம் விளக்கம் கேட்டார். "செபமும், தபமும், தியாகமும், ஒழுக்கமும், அன்பும், கட்டுப்பாடும், கடமை உணர்ச்சியும் பொருந்திய இந்த மடம், எனது இராட்சியத்தை ஒடுக்க, நான் ஆன்மாக்களைக் கெடுக்கும் முயற்சிகளை முறியடிக்கப் பெரிய அரணாக விளங்குகின்றது. ஆத்துமாக்கள் நித்தியத்துக்கும் நரகத்தில் விழுந்து அழியாதிருக்க இங்கே போர் நடாத்தப்படுகிறது. ஆகவே இந்தக் கோட்டையைத் தகர்க்க, இவ் அரணை அழிக்க [illegible] அவசியம்" என்றது பசாசு.

இது ஒரு கதையாக இருக்கலாம். ஆனால், உலகில் நாம் ஒவ்வொருவரும் எமது இரட்சணியத்துக்காகப் போராட வேண்டியுள்ளது என்பது இதனால் தெரிகிறதல்லவா? நமது வாழ்க்கை ஒரு போர்க்களம். பசாசு நம்மைக் கடவுளிடமிருந்து பிரிக்கப் போர் பொருதுகிறது. தான் இழந்த நித்திய பேரின்பத்தை நாம் அடைவதில் அது பொறாமை கொண்டுள்ளது. எனவே, நாம் மோட்சவீடு அடையாதிருக்க அது எம்மைக் கடவுளிடமிருந்து பிரிக்கிறது. ஆசாபாசம், உலக இன்பம், சரீர சுகம், உலக நாட்டம், எல்லாம் தந்து நம்மைச் சோதிக்கின்றது. பசாசு நமக்கு நேரே தானாக வந்து சோதிப்பதில்லை. ஆட்களாக, இடங்களாக, பொருள்களாக உருவெடுக்கின்றது. அசட்டைத்தனம், பொறாமை, பெருமை, ஆங்காரம், கோபம், மோகம், வெகுளி, போசனப்பிரியம், குடிவெறி, விபசாரம் என்று இன்னோரன்ன துர் ஆசைகளாக நமக்கு வருகின்றது பசாசு. அது தந்திரமுள்ளது. கர்ச்சிக்கின்ற சிங்கத்தைப்போல் யாரை விழுங்கலாம் என்று சுற்றித் திரிகிறது. நமது விசுவாசத்தை மழுக்கும். அசட்டைத்தனத்தைத் தரும். இவ்வாறு நம்மைப் பலவீனப்படுத்தும்.

ஆகவே, நாம் நமது அரிய இரட்சகர் காட்டிய வழியில் போராட வேண்டும். நமது போராட்டத்தின் முதல் ஆயுதம் செபம். விழித்திருந்து செபம் செய்யும்படி அவர் அன்று மொழிந்த அருள் மொழிகள் அழிவற்றவை. அவரே செபத்தின் அவசியத்தை வற்புறுத்தினர்; வாழ்ந்து காட்டினர். செபமும், தபமுமே நமது போராட்டக் கருவிகள். நாம் புண்ணிய நெறியில் வளர, கடவுளோடு நெருக்கமாக வரச் சோதனைகளும் அதிகமாகும். கோட்டையைத் தகர்க்கப் பசாசு போராடும். ஆனால், தெய்வ பலம் நம்மோடு இருந்தால் நாமே ஜெயிப்போம். எனவே, தெய்வ பலம் அடைய அடிக்கடி கடவுளுடன் ஒன்றிக்க வேண்டும். செபமே நமக்கு பக்கபலம். செபமே ஜெயம் தரும் கருவி. அதுவே கடவுளின் கரத்தை எம்மோடிருக்கப்பண்ணும். [எஸ்.எம்.ஜே.]

## காலமகளோடு........

—(வாகரை வாணன்)—

கால் போன போக்கில்
கட லோரம் நடந்தேன்
கால மகள் அவளோடு
கதை பேசி நடந்தேன்.

நீலக் கடற் பெண்ணும்
நிம்மதி யாய்ப் படுத்திருந்தாள்
மாலைக் கடற் காற்றும்
மெல்ல உடல் தடவிநின்றாள்.

சுகமான வேளையிலே
சுவையான கதை நூறு
அகமொன்றிப் பேசி நடந்தோம்
அத்தனையும் புதிது, புதிது!

பேச்சுக் கிடை யினிலே
பேசாது நான் நடக்க
ஆச்சரியப்பட்ட அவள்
'அது என்ன மௌன' மென்றாள்!

நீண்ட பல நாளாக
நெஞ்சினிலே நின்று எனைத்
தீண்டுகின்ற கேள்வி பல
திரும்பவும் வந்து என்றன்,

சிந்தையிலே வீழ்ந்த தினால்
சிந்தனையில் ஆழ்ந்து விட்டேன்
சந்தோஷ மென்ப தில்லை
'சத்தியம் என்' றிது,

வாழ்க்கை யென்றால் என்னவென்று
வாட்டத் தோடு கேட்டேன்
'ஏக்கமென்ற சொல்லுக்கு
இலக்கண மாம்' என்றாள்

காதலென்றால் என்ன வென்று
கவலை யோடு கேட்டேன்
மாது அவள் சிரித்து 'அது ஓர்
மயக்க' மென்று சொன்னாள்.

'சா'வென்றால் என்ன வென்று
சஞ்சலத் தோடு கேட்டேன்
'வாவென்ற இறைவனின்
வரவேற்பு மடல்' என்றாள்.

இறைவ னவன் யார் என்று
ஏந்திழை யைக் கேட்டேன்
'மறைந் திருக்கும் அவனோர்
மகத்தான சக்தி' என்றாள்.

கேட்ட பல கேள்விக்கு
கிடைத்த பதில் கண்டு
வாட் டத்தைக் களைந்தேன்
வாழ்க் கையை உணர்ந்தேன்.

# பல தேசங்களில்

● சீனாவில் கடைசியாக இருந்துவந்த ஒரேயொரு கத்தோலிக்க மிஷனரியாகிய ஜேம்ஸ்வால்ஷ் மேற்றிராணியாரை ஷாங்காய்ச் சிறைச்சாலையிலிருந்து சீன எல்லைவரை ஏற்றிச் சென்ற புகையிரதத்திலே ஒரு டக்றர், ஒரு படப்பிடிப்பாளர், இரு துவிபாஷகர்கள், இரு பொலிஸ்காரர் அவரோடு சென்றனராம். ஹொங்கோங் போய்ச் சேர்ந்து நன்றாகக் களையாறியபின் அமெரிக்காவிலே கம்பர்லாந்து நகரில் வசிக்கும் தம்முடைய நான்கு சகோதரிகளோடும், சகோதரனோடும் அவர் போன் மூலம் சம்பாஷித்தாராம்.

● மோட்டர்கார் பந்தய ஓட்டத்தில் பிரசித்தி பெற்றவரான திரு. பில் பிஷப் என்பவர் சென்ற 14ஆம் திகதி பெல்ஜியத்திலே ஒரு பந்தய ஓட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, இவருடைய பந்தயக் கார் விபத்திற்குள்ளாகவே இவரும், இவரோடு சேர்ந்த மூவரும் அந்த இடத்திலேயே உயிர்துறந்தனர். இவர் இதுவரை பந்தய ஓட்டங்களில் 1,000 முறைக்குமேல் விபத்துக்குள்ளாயினர். அதனால் இவரின் உடலிலுள்ள ஏறக்குறைய ஒவ்வோர் எலும்புமே முறிந்துள்ளனவாம்.

● அன்னப் பாப்பரசர் வருகிற கார்த்திகைமாத இறுதியில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சிட்னி நகருக்கு விஜயஞ் செய்யவிருப்பதையிட்டுப் பிரயாண விமானங்களிலும், அங்குள்ள பிரதான ஒட்டல்களிலும் முற்பணம் கட்டி இடங்கள் பெறுவாரின் தொகை வெகுவாக அதிகரித்துள்ளது. அந்நகரின் ஒட்டல்களிலுள்ள இடங்களெல்லாம் நிறைவாக, இப்போது அதன் சுற்றுடல் நகர்களிலுள்ள ஒட்டல்களிலே இடவசதிகள் தேடப்படுகின்றன.

● சீனச் சிறைச்சாலையிலிருந்து இற்றைக்கு ஒரு மாதத்தின்முன் விடுதலைசெய்யப்பட்ட அமெரிக்க மிஷனரியாகிய ஜேம்ஸ்வால்ஷ் மேற்றிராணியார் ஓர் அழுக்கான காக்கிக் காற்சட்டையும், கோடிட்ட ஒரு ஷேட்டும் அணிந்தபடியே செஞ்சீனாவின் எல்லையிலிருந்து ஹொங்கோங் தீவுபோய்ச் சேர்ந்தாராம். இரு பைகளும், சீனப்பிரம்புப் பெட்டி ஒன்றுமே கையில் கொண்டு சென்றாராம்.

● தென்வியெற்னாமிலே சைகோன்நகரில் போல்நூதுக் தம்பதிகள் சமீபத்திலே தங்கள் திருமண 60ஆம் வருட வைரயூபிலி விழாவைத் தங்கள் ஐந்துபிள்ளைகளும் புடைசூழக் கொண்டாடினார்கள் இந்த ஐந்து பிள்ளைகளிலும் மூவர் குருப்பிரசாதிகள். இருவர் கன்னியாஸ்திரிகள். தந்தையார் தனது 9ஆம் வயதில் ஒரு அநாதையான போது மிஷனரிய குரவர் ஒருவர் இவரைச் சுவீகரித்து வளர்த்து மனிதனாக்கி விட்டாராம்.

● ஐக்கிய அமெரிக்கதேச வெஸ்ற்ஹாவென் நகரிலே 76வயதுடைய சங். மரியே கிறிவ்வின் கன்னியாஸ்திரி ஊர்சூலின் கன்னிகாசபையில் தான்சேர்ந்த 50ஆம் வருட தங்கயூபிலி விழாவை அண்மையில் கொண்டாடினர். இளமையிலே இவர் ஓர் ஐரிஷ் ஸ்ரெப்-நடனமாதுவாய் முதன்மைபெற்று விளங்கியவர். இவர் ஒருமுறை லண்டன் நகரிலே ஏழாம் எட்வாட் அரசருக்கும், அலெக்சாந்திரா இராணியாருக்கும் முன்பாக நடனமாடி சன்மானம்பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு அளிக்கும் வள்ளல்

"அவளுக்கு அழகான பிள்ளை பிறந்திருக்கிறதாம். ஆனால் ஐயோ பரிதாபம்! அப்பிள்ளைக்கு இரு கண்களும் தெரியாதாம்!!...

"தம்பி பாடசாலையிலிருந்து வீட்டை நோக்கி ஆவலோடு ஓடிவந்தான். திடீரென விரைந்து வந்த வாகனத்தின் சில்லுகளில் சிக்கிய அவனுடைய இரு கால்களும் ஒரு நொடிப்பொழுதில் நிகழ்ந்த விபத்தால் உபயோகமற்றுப் போயினவாம்...

"குணம், அழகு, அடக்கம், தெய்வபயம் எல்லாம் ஒருங்கே பெற்றிருந்தும் சீதனம் இல்லாத குறையால் அவள் கன்னிப் பெண்ணாகவே காலங்கழிக்க வேண்டியிருக்கிறதாம்

"இவன் குடும்பத்தோடு நன்கு ஒத்துழைத்தான். நல்லவனாய், பெற்றோருக்குகந்த பிள்ளையாய் வாழ்ந்தான். திடீரென ஒரு மாற்றம். இன்று ஊதாரிப்பிள்ளையாய் உலகறியச் சுற்றுகிறானாம்...

"இதுவல்லவோ குடும்பம் என்று சூழ வாழ்ந்தோர் வியக்கத்தக்கதாய் வாழ்ந்தது ஒரு குடும்பம். திடீரென ஒரு சூறாவளி. தந்தை ஒரு திசை. தாய் ஒரு திசை. பிள்ளைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையாகச் சிதறுண்டு சீரழிகின்றனராம்."

உலகிற்கு உப்பாய் இருக்க வேண்டிய மனிதனே சாரமிழந்து போனால் அவன் இழந்த சாரத்தை மீண்டும் பெற வழியுண்டா? மருந்து உண்டா? அழியாத ஆரோக்கியம் அளிக்கவல்ல ஜீவ மருந்து ஒன்று உண்டு. "அதுவே வாழ்வளிக்கும் வள்ளலாகிய யேசுவின் திரு இருதயம்", மாமிசமான தேவனாகிய திரு இருதயம்.

**பி. ஜே. அமிர்தநாயகம்**

காலத்திற்கு அப்பாலான வார்த்தை! மனிதனோடு இரண்டறக்கலந்த நித்திய அன்பின் அவதாரம்!!

## தேவனில் அரங்கேற்றம்

இன்றைய உலகில் நாம் அநேக அரங்கேற்றங்களைப் பார்த்திருக்கிறோம். ஒருவன் ஒரு கலையில் தேர்ச்சியடைகிறான். கலை உலகம் அவனின் ஆற்றலைமெச்சி அவன் குருவையும் பாராட்டுகிறது. இன்னொருவன் சமூக சேவையில் துவங்கி சர்வதேச புகழையும் பெறுகிறான். ஆனால், மனிதன் கட்டியெழுப்பும் கலை மனிதனளவுதான்! அது காலத்துடன் சிதைவடைந்து மடிகிறது! நித்திய தெய்வீக புகழுடன் தோன்றவிட்டால் அது எப்படி நித்தியமாய் நிலைநாட்டப்படும்?

கிறிஸ்து தனது இராட்சியத்தை நித்திய தேவனில் நிலைநாட்டுகிறார். இறைமக்களின் வாழ்வு இறைவனோடு பிணைந்தது. அவர்கள் இறைவனிலும், இறைவனும் வசிக்கிறார்கள். அவர்களுக்கு என்றும், தாழ்வு இல்லை. ஏனெனில், அவர்களை இறைவனே தனது கலையிலும், தனது சேவையிலும் அரங்கேற்றிவிட்டார். அவர் சுயநலம் அற்றவர். அவர் தேவ அன்பின் ஊற்றாய் இருக்கிறார். கல்வாரி அரங்கில் இவ்வுண்மை அரங்கேற்றப்பட்டது. அவரின் மகிமையில் அவரின் பிரசைகள் உரிமை பெற்றுவிட்டனர். "நான் கிறிஸ்தவன்! இதுவே என் பெருமை! என் மகிமை!"

## தாயற்ற பிள்ளை

"தாயற்ற பிள்ளை இது"... ஐயோ! என்ன பரிதாபம். இதிலும் பார்க்க மனித அனுதாப உணர்ச்சியை, கருணையை, பரிவைச் சுரண்டிவிடக்கூடிய அனுதாரவான நிலைமையை மனித வாழ்வின் எப்பருவத்திலும் காணமுடியுமா? அன்பாய்த் தன்னை அளித்த பிதா அவதரிக்கும்போதே இறைமக்களைத் தன்னில் உருவாக்கி விட்டார். அதற்கே மாமிசமானார். அவருடைய பாடுகளினதும், மரணத்தினதும் பலனே ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவதாரத்தில் தன் அன்னையை நித்தியத்தில் தன்னில் விசுவாசம் கொள்ளும் எல்லோருக்கும் அன்னையாக அளித்தார். எப்படி ஐக்கியத்தின் உச்சமாகிய தேவ அன்பர் தன் இதயத்திலிருந்து மாதாவின் இருதயத்தைப் பிரித்திடுவார். மண்ணுலகில்தான் மனிதமொழியில் தாயில்லாப் பிள்ளையைக் காணலாம். விசுவாசி மண்ணுலகில் இருந்த பொழுதும் விண்ணுலகத்தவன். பரம பிதாவின் பராமரிப்பின் நிறைவால் மண்ணுலகில் தாயற்ற அனாதை நிலை யேசுவின் திரு இருதயத்திலும் நிலைக்கப்பெறும். விண்ணுலகில் பிள்ளையோடு தாய் என்றும், தாயோடு பிள்ளை என்றும், என்ன மகத்தான உண்மை இது! கிறிஸ்துவில் சீவிப்பவன் என்றும் தேவனில் சீவிக்கிறான். அவனுக்குத் தேவதாய் என்றும் நித்திய தாயாய் இருக்கிறார்.

"அன்புக்கு உண்டோ அடைக்கும் தாழ்"

## அன்பை வளர்ப்போம்

தேவசினேகம் எவ்வளவிற்கு எங்களிலும், சமூகத்திலும் இருக்கிறதென்பதற்குச் சிறந்த அளவுகோல் பிறர் சினேகமாகும். பிறர் சினேகம் எவ்வளவுண்டோ அவ்வளவு தேவசினேகமும் உண்டு. தேவனே நித்திய பராமரிப்பு அவரே நல்லாயன். அவரின் பராமரிப்பின் கரங்களே கிறிஸ்துவம். ஆன்ம சரீர நன்மைச் சேவைகளில் நாம் எவ்வளவுக்கு உழைக்கிறோமோ அவ்வளவுக்கே நித்திய உயிராகிய அன்பும், சத்தியமும் எங்களில் மிளிர்கிறது. கிறிஸ்துவின் இவ்வுலக சீவியத்தைப் பார்த்தால் அவர் தன்னை எப்பொழுதும் மனுமகன் என அழைப்பதைக் காணுகிறோம். மக்களின் இன்பங்களிலும், துன்பங்களிலும் கலந்துகொள்வதே தன் இலட்சியம் எனக் காட்டினர். அவர் அழுதார். அவர் மகிழ்ந்தார். நன்மையான காரியங்களில் நாமும் உண்மையோடு உழைப்போம். நமது கடமைகள் நமது அந்தஸ்தைப் பொறுத்தது. நாம் எம்மைப் போல எம் பிறரையும் நேசித்துச் சேவை செய்து பேரின்பக் காதலை வளர்ப்போம். இக்காதலை மென்மேலும் இரசிப்போம். இக்காதலில் மகிழ்ந்து பெருமிதம் கொள்வோம். அன்பின் அரசர் என்றென்றும் ஆட்சி புரிவாராக!

# நம்முடைய....

(6-ம் பக்கத் தொடர்ச்சி

குற்றமில்லாததுபோல திரும்பத் திரும்பச் சிலுவையில் அறையச் சம்மதிக்கின்றனர். இவர்களைப்பற்றி (பரி. இரா 2-ம் அதி. 6—8 வச.) என்ன சொல்லுகிறார். "இதோ தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமான முக்கிய மூலைக்கல்லை இதோ சீயோன் நகரில் வைக்கிறேன். அதன்மேல் விசுவாசமாயிருக்கிறவன் கலங்கமாட்டான் என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. விசுவசிக்கிறவர்களாயிருக்கிற உங்களுக்கு அது மகிமையாய் இருக்கிறது. விசுவசியாதவர்களுக்கோ அது இடறுகல்லாகவும், தவறி விழுகிறவர்களுக்கு ஏதுவான கற்பாறையாகவும் இருக்கிறது. அப்படி இடறுவதற்கே அவர்கள் கைவிடப்பட்சி இருக்கிறார்கள்" என்கிறார். அன்றியும், (2-ம் இரா. 2-ம் அதி 1-ம் வச.) அம்படியே உங்களுக்குள் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான பதித மார்க்கங்களை நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்கு வாங்கின ஆண்டவரை மறுதலித்து தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்வார்கள் என்கிறார். இவரது போதனை கிறிஸ்துநாதரால் ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபையை அன்றி மற்றும் சமய வழிபாடுகள் கேட்டுக்கே இட்டுச் செல்கின்றன என்பதே. ஆயின் கிறிஸ்தவின் உண்மை நெறியை அறியாது தன் மனச்சாட்சியின்படி பாவஞ் செய்யாது நடப்பவனுக்கு நீதியுள்ள தேவன் தமது இரக்கத்தைக் காட்டுவார் என்று வத்திக்கான் சங்கம் கூறுகிறது. இந்நோக்கில், உண்மைத் தெய்வம் கிறிஸ்துவை உலகம் முழுவதும் அறியவையுங்கள் என்று தீவிரமாய் ஏவுகிறது.

● தென்வியெற்னும் நாட்டிலே கத்தோலிக்கரின் தொகை கடந்த இருவருடங்களிலும் 1லட்சத்து 500பேரால் அதிகரித்துப் 17லட்சமாகியிருக்கிறது. அந்நாட்டில் சனத்தொகை 1கோடியே 65லட்சம். அங்கே 1,917 குருமார் தொண்டாற்றி வருகின்றனர். இவர்களில் 1517பேரும் வியெற்னுமியரான மேற்றிராசன குருமாரே. இவர்களைத் தவிர வியெற்னுமியரான சந்நியாசர், கன்னியாஸ்திரிமாராய் 224பேர் பணியாற்றிவருகிறார்கள்.

# பேசும் பேனா

## இலக்கிய விழா

சின்ன உரோமையெனச் சிறப்புப்பெறும் சில்லாலையில் கத்தோலிக்க வாலிபர் சங்கமொன்று நீண்டகாலமாக இயங்கிவருகிறது. இச்சங்கம் கடந்தவாரம் தனது ஆண்டு விழா வைபவங்களின்போது ஒரு சிறந்த இலக்கியவிழாவை நடாத்தி முடித்திருக்கிறது. இவ்விழாவின் சிறப்பு அம்சம் உள்ளூர் எழுத்தாளர் ஒருவரைக் கௌரவித்ததாகும்.

## எழுத்தாளரைக் கௌரவித்தல்

தமிழ் எழுத்தாளரைக் கௌரவிக்கும் வழக்கம் நம்மிடையே கிடையாது. புரட்சிக் கவிஞன் பாரதிகூடத் தான் வசித்த காலத்தில் தமிழ் மக்களின் மதிப்பைப் பெறவில்லை. அதிலும் தமிழ் எழுத்தாளனென்றால் அவனது சொந்த ஊரவர்கள் ஏளனமாகத்தான் நோக்குவார்கள். இந்நிலையில் சில்லையூர் இளைஞர்கள் தம் கிராமத்தைச் சேர்ந்த எழுத்தாளர் ஒருவர் எழுத்துலகில் புகுந்த 25-ம் ஆண்டு நிறைவு தினத்தைத் தங்கள் சொந்த விழாவாகக் கருதி அவருக்குப் பொன்னாடை போர்த்தி எழுத்தாள உலகத்தில் தமக்கென ஒரு சிறப்பைத் தேடிக் கொண்டனர்.

## செல்வராஜன்

தங்கள் கிராமத்தைத் தங்கள் பெயருடன் இணைத்து உலகுக்கு அறிமுகம் செய்துவரும் ஒருசில எழுத்தாளர்களுள் சில்லையூர் செல்வராஜனும் ஒருவர். கடந்த இருபத்தைந்து வருடங்களாக இலக்கிய உலகில், தனிச் சிறப்படைந்துவரும் இந்த எழுத்தாளரின் இயற் பெயர் மரியதாசன் என்பதாகும். இளவாலை என்றியரசர் கல்லூரியிலும், காவலூர் அந்தோனி முனிந்திரர் கலாலயத்திலும் கற்றுத்தேறிய மரியதாசன் நாடகங்கள் மூலமே கலையுலகில் புகுந்தார். இளவாலை என்றியரசர் கல்லூரியால் மேடையேற்றப்பட்ட ஆபிரகாமின் பலி என்ற குட்டி நாடகத்தில் மரியதாசன் ஈசாக்காகத் தோன்றி தாம் ஒரு குட்டிக் கலைஞன் என்று நிரூபித்தார்.

## பேர்ணதேத்தின் கானம்

அடுத்து மேற்படி கல்லூரி மூன்று மணித்தியால நாடகமொன்றை அரங்கேற்றியது. பேர்ணதேத்தம்மாள் கானம் என்ற இந்நாடகத்தின் 'கதாநாயகியாக'— 'பேர்ணதேத்தாக', மரியன்னையின் காட்சிகளைப் பெறும் அடியாளாக இந்த மரிய—தாசன் நடித்தமை இன்றும் எனது மனக் கண்ணிலிருந்து மறையவில்லை. இந்நாடகம் யாழ் நகரிலும் கரவெட்டி, மன்னார் முதலிய இடங்களிலும் சிறப்புடன் அரங்கேற்றப்பட்டது.

## எழுத்துலகில்

காவலூரில் தம் கல்வியை முடித்துக்கொண்ட மரியதாசன் எழுதத் தொடங்கினார். அன்னை தந்தை செல்வமாக அழைத்த பெயர் எழுத்துலகப்பெயர் ஆயிற்று. கிராமத்துப் பெயருங்கூடவர **சில்லையூர் செல்வராஜன்** என எழுத்துலகம் இவரை அறியத் தொடங்கியது. சுதந்திரன், வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளில் துணை ஆசிரியராகச் சேவை புரிந்தார். **தான்தோன்றிக் கவிராயர்** என்ற நாமத்துடன் கவிதைகளை எழுதிக் குவித்தார். இலங்கை வானொலி இவரது கவிதைகளை, நாடகங்களை, வரலாற்றுக் காவியங்களை அடிக்கடி ஒலிபரப்பத் தொடங்கியது.

## விளம்பர உலகில்

வியாபாரத்துக்கு விளம்பரம் அவசியம் அல்லவா? எனவே தம் சொந்த முயற்சியால் இந்த இளைஞர் விளம்பர நிறுவனமொன்றையும் நிறுவினர். சிலகாலமாக இந்நிறுவனம் மிக நல்ல முறையில் இயங்கிவந்தது. எழுத்துலகில் இருபத்தைந்து வருடங்களைப் பூர்த்தி செய்த சில்லையூர்ச் செல்வராஜனின் பேனா இத்துடன் ஓய்ந்துவிடவில்லை. வானொலி நாடகங்கள், விளம்பரக் காவியங்கள், பத்திரிகைகட்குக் கவிதைகள் கதைகள் கட்டுரைகள் எழுதுவதுடன் ஈழத்தில் தயாரிக்கப்படும் தமிழ்த் திரைப் படங்களிலும் புகுந்து செயலாற்றி வருகின்றது. எழுத்தாளர் மகாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் செல்வராஜனின் குரல் கம்பீரமாக ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

## பேனாவின் வாழ்த்துக்கள்

இவ்விதம் இலக்கிய உலகில் ஒப்பாரும் மிக்காரும் இன்றிக் கொடிகட்டிப் பறக்கும் இந்தக் கத்தோலிக்கரின் இருபத்தைந்தாண்டுப் பூர்த்தியின்போது பேசும் பேனா தனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. தங்கள் சக கிராமவாசிக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கும் புனிதபணியை மேற்கொண்ட சில்லையூர்க் கத்தோலிக்க வாலிபர் சங்கத்தையும் பேனா மனமார வாழ்த்துகின்றது.

● ஜேர்மனியில் ஒக்ஸ்பேக்நகர் ஆசனக்கோவிலிலே உலகின் மகாப்பெரிய தாய்ப் புனித கிறிஸ்தோப்பரின் சுவர்ச்சித்திரம் ஒன்று இருந்து வருகிறது அக்கோவிலின் தென்மேற்குச்சுவர் முழுவதிலும் இப்படம் அடங்கியிருக்கிறது. இதன் உயரம் மாத்திரம் 80அடிக்கு மேலாகும்.

● இந்துமலேச்சாவிலே சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 31வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டனவென்றும், இந்த வெள்ளப்பெருக்கில் 600பேரல்ல, 100பேரே இறந்திருக்கலாமென்றும் தற்போது நம்பப்படுகிறது இந்த வாகனங்களில் பிரயாணஞ் செய்தவர்கள் இந்த யாத்திரிகர்களே. இவர்களின் கதி என்னவென்பது இன்னமும் தெரியவில்லையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

**ஆவணி — 1970**

| | | | |
|---|---|---|---|
| 9 | ஞாயிறு | வருடத்தின் 19-ம் ஞாயிறு | [ப] |
| 10 | திங்கள் | புனித லோறன்ஸ் | [சி] |
| 11 | செவ்வாய் | தினப் பூசை | [ப] |
| 12 | புதன் | புனித கிளாரு | [வெ] |
| 13 | வியாழன் | தினப் பூசை | [ப] |
| 14 | வெள்ளி | ,, | [ப] |
| 15 | சனி | மாதாவின் ஆரோபணம் | [வெ] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# சிந்தனையும் செயலும்

மனிதனின் உள்ளத்தில் எத்தனை போராட்டங்கள் நிகழ்கின்றன. இந்தப் போராட்டத்தின் விளைவாகத் தம் நிலையிலிருந்து உயர்ந்து விளங்கியவரும் உளர். அந்நிலையிலிருந்து வீழ்ச்சி அடைந்தவரும் உளர். இப்போராட்டங்களுக்குக் காரணம் மனிதனது இயற்கைச் சுபாவமாகும். அவன் ஒரு சாதாரண சிருஷ்டி. எனவே, அவனது ஆற்றல்களுக்கு எல்லையுண்டு, கருதியபடியெல்லாம் செயலாற்றும் வல்லமை அவனுக்கில்லை. அதே சமயத்தில் எல்லையற்ற ஆர்வங்கள், அபிலாசைகள் எழுந்து அவன் இன்னும் மேலான வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருப்பதை உணர்த்துகின்றன.

நாம் எவ்வளவோ நன்மைகளைச் செய்ய வேண்டுமென விரும்புகிறோம். ஆனால், செய்வதென்னவோ மிகக் குறைவுதான். எமது விருப்பத்துக்கும், செயலுக்குமிடையில் ஒரு பெரிய பிளவு இருந்து எமது நிம்மதியைக் குலைத்துக் கொண்டேயிருக்கிறது.

தனிமையில் வாடும் வயோதிபர் ஒருவரைச் தரிசித்துச் சில வார்த்தைகள் பேசவேண்டும், அவருக்கு ஆறுதல் கூறவேண்டும் என எம் உள்ளத்தில் ஓர் எண்ணம் எழுகின்றது. ஆனால், அதைச் செயல்படுத்த நினைக்கும்போது எமக்கு வேறு எத்தனையோ அவசர அலுவல்கள் முளைத்து விடுகின்றன. சரி, நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று அதைப் பின்போடுகிறோம். ஆனால், மறுநாளும் அதே கதைதான்.

செபமோ, வேலையோ, பொழுதுபோக்கோ, எல்லாவற்றிலும் நாம் செய்ய ஆசிக்கும் நன்மைக்கும் அதைத் தடுத்து நிற்கும் எமது சுயநலத்திற்குமிடையே போராட்டம் நடக்கிறது. வீதியில் ஒழுங்காகச் செல்ல வேண்டும் என்பதை அறிவோம். ஆயினும், எமது அவசரத்தில் பிறருக்கு இடையூறு உண்டாகக் கூடிய விதமாக நடந்துகொள்ளுகிறோம். பிறரோடு அன்பாகவும் ஆதரவாகவும் பேச வேண்டுமென்றுதான் நினைக்கிறோம், ஆனால், அவர்களின் குறைபாடுகளைக் கண்டு நகையாடவும், பொறுமையிழக்கவும் செய்கிறோம், பிறர்சிநேகத்துடன் நடந்துகொள்ள வேண்டுமென்றுதான் விரும்புகிறோம். ஆனால், ஒருவரைப் பற்றிக் கேள்விப்பட்ட அவதூறுகளை வேறு யாருக்கும் கூறவே எமது நா துடிக்கின்றது.

நாம் சிந்தனை செய்யும்போது இலட்சியவாதிகளாகத்தான் இருக்கிறோம். விண்முகட்டை எட்டிப் பிடிக்க எண்ணுகிறோம். ஆனால் செயலில் இறங்கும்போது ஒரே வீழ்ச்சி. அது மட்டுமல்ல. பின்னர் எழுந்து நிற்கவும முடியாது இலட்சியத்தைக் கைவிடுகிறோம். இதனால் எமது மனதில் எம்மைக் குறித்தே அதிருப்தி உண்டாகிறது

சிந்தனையும், செயலும் ஒத்து இயங்கவும், வீழ்ச்சியின் பின்னும் இலட்சியத்தைக் கைவிடாதிருக்கவும் வழிகாட்டுவது யாது? கிறிஸ்துநாதரின் வார்த்தையும் வாழ்க்கையுமே. எமது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும ஏற்படும் சோதனைகளைச் சமாளிப்பதற்குக் கிறிஸ்துநாதரது சீவியத்தையும், போதனையையும் பற்றித தியானிப்பது அவசியமாகும். தமது பரிசுத்த ஆவிமூலம், மனித்ன் தனது உன்னத இலட்சியத்துக்குகந்த விதமாக வர்ழ்வதற்கு வேண்டிய ஒளியையும், வலிமையையும் அவர் அருளுவார்.

# “நம்முடைய ஆண்டவரும் இரட்சகரும் ஆகிய யேசுக்கிறீஸ்துவை அறியும் அறிவில் வளர்ந்து வருவீர்களாக”

**(2-ம் இராயப்பர் 3-ம் அதி. 18-ம் வச.)**

கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நாம் கட்டாயமாகக் கடைப்பிடிக்கவேண்டிய இவ்வருள் வாக்கு, பரிசுத்த இராயப்பரால் கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களுக்கு புத்திமதியாகக் கூறப்பட்டது. பரிசுத்த சின்னப்பரோ இதைத் தொடர்ந்து என்ன சொல்லுகிறார்? “நான் அறிந்த ஆண்டவரும், இரட்சகருமாகிய கிறிஸ்துவை, அந்த உண்மைத் தெய்வத்தை நான் உலகுக்கறிய வையாவிட்டால் எனக்கு ஐயோ கேடு” என்கிறார். ஆகையால் நாமும் பரிசுத்த இராயப்பர் கூறுவதுபோல் யேசுநாதரை அறியும் அறிவில் வளர்ந்து, பரிசுத்த சின்னப்பர் கூறுவது போல், (எல்லாச் சமயமும் சரியென்றுகூறி கேட்டைத் தேடாமல்) நாம் அறிந்த உண்மைத் தெய்வத்தை உலகுக்கறியவைப்போம்.

“ஒன்றே குலம் ஒன்றே தெய்வம்” என்ற பொன் வாக்கைப் பாரதியார் மாத்திரமல்ல, மக்கள் யாவரும் விஷேமாக கத்தோலிக்க கிறிஸ்தவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டியது, விளக்கமாகச் சாட்சி கொடுக்கவேண்டியது வேதாகமத்தையும், புனிதர்கள், வேதசாட்சிகளின் சரிதைகளையும் ஆராய்ந்தால் தெளிவாக ஆதாரம் கண்டு கொள்ளலாம், ஏனெனில், நாம் அறிந்துகொண்டபடி, நமது பரலோக பிதா, தமது திருச்சித்தம் கொண்டு உலகை எப்போ படைத்தாரோ, அப்போதே, அவர் தம்மால் படைக்கப்பட்ட மக்கள் யாவரும் தம்முடன் ஒன்றுசேர்ந்து ஒரே குடும்பமாக வாழவேண்டும் என்று விரும்பினர். அவர்களை ஒரே குடும்பமாக்க, இறைவாக்கினர் மூலம் அவர்களுடன் உரையாடி தாமே “ஆதியும் அந்தமும்” என அறிய வைத்து, உடன்படிக்கைகள் செய்து, தாம் பிதா, அவர்கள் பிள்ளைகள் என்பதைப் பல தடவைகளில் விளக்கினார். ஆயின், மக்களோ அலகைகளின் அணுப்புதல்களினால் அலைக்களிக்கப்பட்டு, தத்தம் விருப்பப்படி தம்முள் பிளவு கொண்டனர். இரக்கமுள்ள பிதாவோ தமது மட்டற்ற அன்பை விளக்க, தமது வார்த்தையாகிய திருச்சுதனை உலகுக்கனுப்பி, கிறிஸ்துவைத் தலைவனாகக்கொண்ட திருச்சபையை ஸ்தாபித்து ‘ஒன்றே குலம், ஒன்றே தெய்வம்’ என்பதனைத் திரும்பவும் மக்களுக்கு அறிய வைத்தார். இதைப்பற்றி பரிசுத்த அருளப்பர் தமது சுவிசேஷத்தில் கூறுவதை அவதானிப்போம். (பரி. அரு. 1-ம் அதி. 1—5 வச.) “ஆதியிலே வார்த்தை இருந்தார், அந்த வார்த்தை சருவேசுரனிடத்தில் இருந்தார், அந்த வார்த்தை சர்வேசுரனுகவும் இருந்தார். அவர்மூலமாக சகலமும் உண்டாக்கப்பட்டதொழிய, உண்டாக்கப்பட்டவைகளில் எதுவும் அவராலேயன்றி உண்டாக்கப்படவில்லை. அவருக்குள் இருந்த ஜீவன் மனிதருக்கு ஒளியாய் இருந்தது.” (12-ம் வச.) “யார் யார் அவரை ஏற்றுக்கொண்டு, அவருடைய நாமத்தின்மேல் விசுவாசம் உள்ளவர்களானார்களோ, அவர்கள் தேவபுத்திரர் ஆகும்படி, அவர்களுக்கு வல்லமையைக் கொடுத்தார்” என்கிறார்.

இவ்வாறு மனிதரைத் தமது தெய்வீக வாழ்வுடன் ஒன்றுபடுத்தவந்த யேசுநாதர் தம்மைப்பற்றி என்ன சொல்லுகிறார்? “வழியும் சத்தியமும் ஜீவனும் நாமே” என்கிறார். என்னையன்றி உங்களால் ஒன்றும்செய்ய முடியாதென்று அத்தாட்சிப்படுத்துகிறார். “என்னைக் காண்பவன் பிதாவைக் காண்கிறான்” என்று விளக்குகிறார். இவ்வாறு சத்திய வாக்கை உரைக்கும் உண்மைத் தெய்வம், ‘எல்லாச் சமயமும் சரி’ என்று எங்காவது வேதாகமத்தில், (சுவிசேஷத்தில்) கூறியிருக்கிறாரா? பிதாவுடன் தம்மை ஒன்றுபடுத்தும் தூய ஆவியானவர்மூலம் மக்கள் யாவரும் திரியேக தேவனின்

— நாதன் —

ஒரே குலத்தைச் சேர்ந்த பிள்ளைகள் என்கிறார். இவரது போதனையைக்கேட்டு இவரால் விசேஷ அழைப்புப்பெற்ற அப்போஸ்தலர்களுள் யேசுநாதரை அதிகம் நேசித்த பரிசுத்த அருளப்பர் தமது நிருபத்தில் அவரைப்பற்றி எவ்வாறு சாட்சி பகருகிறார் என்று கவனிப்போம். (பரி. அரு. 1-ம் நிரு. 1-ம் அதி. 3—5 வச.) “பிதாவிடத்தில் நின்று வந்த அந்த நித்திய ஜீவியரை நாங்கள் கண்டு, சாட்சிசொல்லி அவரை உங்களுக்கு அறிவிக்கிறோம். நீங்கள் எங்களோடு ஐக்கியமாகத்தக்கதாகவும், நம்முடைய ஐக்கியம் பிதாவோடும், சுதனாகிய யேசுக்கிறிஸ்துவோடும் கூடியிருக்கத்தக்கதாக, நீங்கள் மகிழ்ச்சியடையவும், உங்கள் மகிழ்ச்சி பூரணமாயிருக்கவும் வேண்டுமென்று இவைகளை எழுதுகிறோம்” என்று தாங்கள் கண்களால் கண்டு, காதுகளால் கேட்டு, கைகளால் பரிசித்ததுமான உண்மைத் தெய்வத்தைப்பற்றி எழுதுகிறார். இந்த அன்பின் அப்போஸ்தலர் மாத்திரமல்ல ஒவ்வொரு அப்போஸ்தலரும் தமது சுவிசேஷங்களில், நிருபங்களில், பிரசங்கங்களில் ‘ஒன்றே குலம், ஒன்றே தெய்வம்’ என்று திரும்பத் திரும்ப வெளிப்படுத்துகின்றனர்.

புற ஜாதியாரின் அப்போஸ்தலாக யேசுநாதரால் அழைக்கப்பட்ட பரி. சின்னப்பர் தமது நிருபங்களில், மாறுபாடான போதகங்களைப் பின்பற்றுவோருக்கும், அஞ்ஞானிகளுக்கும், யேசுநாதரே ஒரேயொரு உண்மைத் தெய்வம் என்றும், மக்கள் யாவரும் அவரின் சிலுவைப் பலியால் மீட்கப்பட்டவர்கள் என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார். அன்றியும் (எபி. 1-ம் அதி. 1-ம் வச) “விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவர்கள் யாவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், (கலாத். 3-ம் அதி. 28-ம் வச.) யூதனென்றும், கிரேக்கனென்றும், அடிமையென்றும், சுயாதீனனென்றும், ஆண் என்றும் பெண்ணென்றும் வித்தியாசமில்லை. யாவரும் ஒரே யேசுநாதரிடத்தில் ஒன்றாய் இருக்கிறார்கள் என்றும் தெளிவாக விளக்குகிறார். இவ்விதமாக அப்போஸ்தலர், வேதசாட்சிகள், புனிதர் கிறிஸ்து சமயம் ஒன்றே உண்மைச் சமயம் என்று சாட்சிபகர்ந்து, சிலுவைகள் சுமந்து, இரத்தம் சிந்தியிருக்க, இன்று கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நாம் நமது கிறிஸ்துவ வாழ்வில் திருப்தியற்றோராய், ஸ்திரமில்லாதவராய், போதிய வேத அறிவு இல்லாதவர்களாய், மற்றவர்களுக்கு கிறிஸ்துவின் உண்மைப் போதகத்தை அறியவைத்து அவர்களையும் சந்தோஷமாக தாம் அறிந்த கிறிஸ்துவிடம் சேர்க்காது, எல்லாச் சமயமும் சரியென்றும், அவரவர் தத்தம் சமயத்தில் சரியாக நடந்தால் போதும் என்றும் கூறிவிடுகிறோம். சமாளிக்கிறோம். எல்லாச்சமயமும் நித்திய சீவியத்தைத் தரக்கூடுமாயிருந்தால் கிறிஸ்துநாதரின் போதனையின் பயன்தான் என்ன? அப்போஸ்தலரின் மனம் திருப்புதற் பணியின் நோக்கம்தான் என்ன? வேதசாட்சிகள் அன்றும் இன்றும் சிந்திய இரத்தத்தின் விலைதான் என்ன? இவ்வுலக இன்பங்களையெல்லாம் வெறுத்து, கிறிஸ்துவைப் பின்பற்றி அவரின் சிலுவைகளை நன்மனமாய்ச் சுமந்த ஆயர் குருமார், புனிதர் முதலியோரின் முன்மாதிரிதான் என்ன? எல்லாம் விழலா? வேதாகமமே பொய்யாகிவிட்டதா? எவ்வளவு மனவருத்தம்! இன்று எத்தனையோ கிறிஸ்தவர்கள் சனசமூக முகத்துக்கு அஞ்சி இராயப்பரைப் போல கிறிஸ்துவை மறுதலிக்கிறார்கள். பணத்துக்காசைப்பட்டு யூதாசைப்போல் சத்துராதிகளுக்குக் கிறிஸ்துவைக் காட்டிக் கொடுக்கிறார்கள். இடது பக்கக் கள்ளனைப்போல் கிறிஸ்துவைத் தூஷணிக்கிறார்கள். பிலாத்துவைப்போல் துணிவற்றோராய்க் கைகழுவி, நம்மில்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 970ஆம் ஆ. ஆவணி மீ 8ஆம் உ. சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: “கத்தோலிக் பிறஸ்” யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org